DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 214/2024 |
| Deposition of Witness for | : | P.W. 4 |
| Name | : | **ஆறுமுகம்** |
| Father's Name | : | மந்தையன் |
| Village | : | மானமதுரை |
| Taluk | : | மானமதுரை |
| Calling | : | மெக்கானிக் |
| Age | : | 61/2025 |

**(வழக்கின் எதிரி ஆஜர் .)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 24.03.2025

**முதல் விசாரணை:**

நான் தற்போது மானாமதுரையில் வசித்து வருகிறேன். நான் டுவிலர் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் 1 வருடங்களுக்கு முன்பு சிப்காட் போலிசார் என்னிடம் தற்போது காட்டப்படும் கையொப்பங்களை வாங்கினார்கள். எங்கு வைத்து கையொப்பம்செய்தேன் என்றால் ஞுபாகமில்லை. பார்வைமகஜரில் உள்ள 2 வது கையொப்பம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ- 2 மற்றும் 3 ஆகும், போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை :**

**போலிசார்** என்னை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது 20.01.2024 ம் தேதி மாலை 06.30 மணியளவில் மானாமதுரை காவல் வட்ட ஆய்வாளர் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும் அதன் பிறகு 19.00 மணியளவில் வழக்கின் சம்பவ இடத்தில் இருந்து உடைந்த சின்ன முன்டுங்கல் ஒன்றையும் பேருந்தின் உடைந்த கண்ணாடி துண்டுகளையும் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றும் அதற்காக நான் கையொப்பம் செய்தேன் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றாலும் தற்போது எதிரி கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் எதிராளி முன்பாக சாட்சியம் சொல்லப்பட்டு என் கண்காணிப்பின் கீழ், அவைகளை அப்படியே தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சரியாக இருப்பதாக சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

A PASUMPON SHANMUGAIAH
Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.03.24 19:07:26 +0000

தலைமைக் குற்றவியல் நடுவர்,

சிவகங்கை.